# 24

# "தவறாக நடத்தப்படுதலை சகித்துக் கொள்ளுவதை ... தேர்ந்துகொள்ளுதல்"

## [11:23-29]

*நாம் யாவருமே முடிவுகளை ஏற்படுத்துதலைக் கொண்டிருக்கிறோம்.சில முடிவுகள் சார்பளவில் முக்கியத்துவம் அற்றவைகளாக உள்ளன; மற்றவைகள் முதன்மையானவைகளாக உள்ளன. எபிரெயருக்கு எழுதிய நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ, அந்தக் கிறிஸ்தவர்கள் பின்வரும் முடிவுடன் போராடிக் கொண்டிருந்தனர்: கிறிஸ்தவத்தில் இருப்பதா அல்லது யூதத்துவத்திற்குத் திரும்பிவிடுவதா. அவர்கள் மதித்த ஒரு மனிதரைப் பற்றி, தேவனுடைய சித்தத்தின்படி செய்தல் பற்றி ஒரு கடினமான முடிவை மேற்கொண்டதையும் செய்த ஒரு மனிதரைப் பற்றி அவர்களுக்கு எழுத்தாளர் நினைவூட்டினார்.*

## கர்த்தரைப் பின்பற்றும்படி மோசேயின் தேர்ந்து கொள்ளுதல்

**முந்திய நிகழ்வுகள்**

பார்வோனின் கட்டளை இருந்தபோதிலும் (யாத்திராகமம் 1), மோசேயின் பெற்றோர் அவரைக் கொல்லவில்லை, ஆனால் அதற்குப் பதிலாக அவரை மறைத்து வைத்தனர் (யாத்திராகமம் 2:1, 2; எபிரெயர் 11:23). அவரது தாய் அவரைத் தண்ணீர் புகாத ஒரு கூடையில் வைத்து நைல்நதியில் விட்டாள், அங்கே அவர் பார்வோனின் மகளால் கண்டுபிடிக்கப் பட்டார் (காண்க யாத்திராகமம் 2:3-10). அவர் பார்வோனின் அரண்மனையின் பகட்டில் வளர்க்கப்பட்டார் (காண்க நடபடிகள் 7:22).

**முடிவெடுக்கும் வேளை**

மோசே வளர்ந்து பெரியவரானபோது, அவர் முடிவெடுக்கும் வேளை ஒன்றை அடைந்தார். மேலோட்டமாகப் பார்க்கும்போது இது, மேற்கொள்வதற்குக் கடினமான முடிவு போன்று காணப்படுவதில்லை. அவர் எகிப்தின் செல்வம் மற்றும் அதிகாரம் யாவற்றையும் கொண்டிருக்கலாம் அல்லது ஒன்றுமில்லாமையை - ஒன்றுமில்லாமைக்கும் குறைவானதை - தேர்ந்துகொண்டிருக்கலாம்; அந்தத் தேர்ந்துகொள்ளுதல் என்பது, இஸ்ரவேல் மக்கள் என்ற அடிமை மக்களினத்துடன் தம்மை அடையாளப்படுத்திக்

கொள்வதாக இருந்தது. மோசே மேற்கொண்ட திகைக்கவைக்கும் முடிவைப் பற்றி எபிரெயர் 11:24-27 நமக்குக் கூறுகிறது. மூன்று முக்கியமான வார்த்தைகளைக் கவனியுங்கள்:

"வெறுத்து": ஒரு இடத்தில், ஒரு வேளையில், மோசே, எகிப்திற்கு, பார்வோனுக்கு மற்றும் தமக்குத் தாயாக இருந்த பார்வோனின் மகளுக்கு "இல்லை" என்று கூறினார்.

"தெரிந்துகொண்டு": மோசே, சந்தோஷங்களுக்குப் பதிலாக தவறாக நடத்தப்படுதலை, பொக்கிஷங்களுக்குப் பதிலாக நிந்தனையை தேர்ந்துகொண்டார்.

"விட்டுப் போனான்": *KJV* வேதாகமத்தில் "கைவிட்டுப்போனார்"[1] என்றுள்ளது (வசனம் 27). மோசேயின் முடிவில் ஒரு தீர்க்கமான தன்மை இருந்தது. "அவர் தமக்குப் பின்னால் தமது பாலங்களை எரித்தார்" என்று நாம் கூறலாம்.

## "விசுவாசத்தினாலே" மோசேயின் முடிவு ஏற்படுத்தப்பட்டது

மோசே மேற்கொண்ட தேர்ந்துகொள்ளுதலை, எவரொருவரும் ஏற்படுத்துவது எவ்வாறு? அது *விசுவாசத்தினாலே* ஏற்படுத்தப்பட்ட ஒரு தேர்ந்துகொள்ளுதலாக இருந்தது.

(1) அது இல்லத்தில் தொடங்கிய விசுவாசமாக இருந்தது (வசனம் 23). மோசேயின் தாய் அவருக்குத் தாதியாக இருந்தார் என்பதை மறந்துவிடாதீர்கள் (யாத்திராகமம் 2:7-10).

(2) அது தேவன் தமது மக்களுடன் இருந்தார் என்று கண்டறிந்த விசுவாசமாக இருந்தது (வசனம் 24). "மோசே, பிரியமாயிருந்த எகிப்தியர்களுக்கு மேலாக, எரிச்சல் மூட்டிய இஸ்ரவேல் மக்களைத் தேர்ந்துகொண்டார்" என்று யாரோ ஒருவர் கூறினார். மார்க்கத்தில் தவறான விஷயங்களைப் பலர் கண்ணோக்குகின்றனர்; அவர்கள் தேவனும் அவரது மக்களும் இருக்கும் இடத்தைக் கண்டறிதல் அவசியமாக உள்ளது.

(3) அது இந்த வாழ்வின் உண்மையான இயல்பையும் கவர்ச்சிகளையும் கண்ட விசுவாசமாக இருந்தது (வசனம் 25அ). உலகப்பிரகாரமான சந்தோஷங்கள் "கடந்து செல்பவைகளாக" உள்ளன. மோசே, "வாழ்வின் நெடிய கண்ணோட்டத்தை" மேற்கொண்டார். அதையே செய்ய நாம் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது.

(4) அது உண்மையுள்ளவர்களுக்கு தேவன் பலனளிப்பார் என்பதில் உறுதியான தைரியம் கொண்டிருந்த விசுவாசமாக இருந்தது (வசனம் 26).

(5) அது தேவன் மீதும் அவரது திட்டத்தின் மீதும் மையங்கொண்டிருந்த (வசனம் 27) விசுவாசமாக மற்றும் வெற்றியின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த (வசனம் 28) விசுவாசமாக இருந்தது. மோசே "பஸ்காவை ஆசரித்த" போது அவர், அது நித்திய நியமமாக [என்றென்றைக்கும்] கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பண்டிகையாக இருந்தது என்று இஸ்ரவேல் மக்களுக்குக் கூறினார் (காண்க யாத்திராகமம் 12:24). இது அவர்கள் எகிப்தை விட்டுப் பாதுகாப்புடன் புறப்படுவார்கள் என்பதை முன் அனுமானம்

*செய்தது!*

*(6) கடைசியாக அது மற்றவர்களில் விசுவாசத்தைப் பற்றியெரியச் செய்த விசுவாசமாக இருந்தது (வசனம் 29).*

## முடிவுரை

*மோசே சரியான முடிவை மேற்கொண்டாரா? பழங்காலப் பார்வோன்களின் பாதுகாக்கப்பட்ட எச்சங்களைக் கண்டறிய நீங்கள் தூசிபடிந்த அருங்காட்சியங்களுக்குச் செல்ல வேண்டும்; ஆனால் மோசே பல லட்சக்கணக்கான இருதயங்களில் வாழ்கிறார். மிகமுக்கியமாக அவர், தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்கிறார்.*

*மக்களில் பலர், தங்கள் வாழ்வில் குறுக்குச் சாலைகளில் இருக்கின்றனர். இது உங்களுக்கு முடிவு செய்யும் வேளையாக உள்ளதா? ஆம் என்றால், நீங்கள் சரியான முடிவை மேற்கொள்ள வேண்டும், நீங்கள் உலகப்பிரகாரமான ஆதாயங்கள் மீது மாத்திரம் கவனம் குவிப்பதற்குப் பதிலாக நெடிய கண்ணோட்டத்தை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.*

---

*குறிப்பு*

*[1]"புறப்பட்டுப் போகுதல்" மற்றும் "கைவிட்டுச் செல்லுதல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (kataleipo என்ற) கிரேக்க வார்த்தை "விட்டுச்செல்லுதல்" என்பதன் வலிவூட்டப்பட்ட வடிவமாக உள்ளது. இவ்வசனப்பகுதியில் இது கைவிட்டுவிடுதல் என்ற கருத்தைக் கொண்டுள்ளது.* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 362.)